**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**2023–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16–ம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.02/2023**
**இன்**
**அ.வ.எண்.42/2015**

பர்வதவர்த்தினி மற்றும் 9 நபர்கள் ......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

இராஜவேலு மற்றும் 8 நபர்கள் ........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 20.07.2023–ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜாம்சிங் அண்டன் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுப்புராஜ் அவர்கள் ஆஜராகியும், 4, 5, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சமாக உள்ள நிலையில், இருதரப்பு வாதங்களையும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உவிநமுச 151 சிபிசி படி அசல் வழக்கில் சர்வே எண்களை திருத்தம் செய்ய அனுமதித்து அசல் வழக்கின் பிராதினை திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள்/வாதிகளால் வழக்குரையில் திருத்தம் செய்யக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவிற்கு IA 49/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று

enquiry க்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அசல் வழக்கில் கண்ட சொத்து விபரத்தில் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ரிடி, இராமேஸ்வரம் சப்டி, மண்டபம் கிராமம், இராமநாதபுரம் வருவாய், மண்டபம் குரூப், பழைய சர்வே எண்.124/1 என்றிருந்து புதிய சர்வே எண்ணாக மாற்றம் செய்யப்பட்ட சர்வே எண்.240/1 ல் சுமார் 9 செண்ட் நிலமும், " என்பதற்கு பதிலாக" பழைய சர்வே எண்.240 என்றிருந்து தற்போது புதிய உட்பிரிவுகளின்படி சர்வே எண்.240/2 ல் சுமார் 9 செண்ட் நிலமும்" என்ற சொல்லை சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியுள்ளது. மேற்படி தவறானது நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் மற்றொரு வழக்கான O.S.No.2/2022 ல் சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட போது தான் அவ்வழக்கில் கண்ட சொத்து விபரத்தில் சர்வே எண் தட்டச்சு பிழையால் தவறாக சொல்லப்பட்டுள்ள விபரம் தெரியவந்தது. அவ்வழக்கில் திருத்த மனுதாக்கல் செய்யும்போது தான் இந்த அசல் வழக்கில் கண்ட சொத்து விபரத்தில் சர்வே எண் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. முற்றிலும் Typographical error ஆகும்.

ஒருவேளை இந்த அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஏற்படும் பட்சத்தில் தற்போது வழக்குரையில் கண்ட சொத்து விபரத்தில் நான்குமால்கள் சரியாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அதன் சர்வே எண். தவறுதலாக சொல்லப்பட்டுள்ளதால் அது வேறு சொத்தை குறிக்க கூடியதாக இருந்து அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்த முடியாத inexecutable decree ஆக மாறிவிடும் இந்த அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகளால் சொல்லப்பட்ட வழக்குரையில் கண்ட சர்வே எண்களை திருத்தினால் மட்டுமே எங்களது உரிமையை நிலைநாட்ட ஏதுவாக இருக்கும்.

அவ்வாறு அசல்வழக்கில் கண்ட சர்வே எண்களை திருத்துவதால் வழக்கின் தன்மையோ, சொத்தின் அம்சமோ வழக்குமூலமோ, ஒரு போதும் மாறக்கூடியதும் இல்லை. மேலும் மேற்படி திருத்தமானது காலவரைச்சட்டத்தால் ஒருபோதும் பாதிக்கப்படக்கூடியதும் இல்லை. அவ்வாறு அசல் வழக்கில் இத்துடன் தாக்கல் மனுவில்கண்ட விவரப்படி திருத்தம் செய்வது அவசியமாக உள்ளது. இல்லாது போனால் எங்களுக்கு மிகுந்த பாதகமும், கஷ்ட நஷ்டமும் ஏற்படக்கூடியதாக உள்ளது.

அவ்வாறு அசல் வழக்கில் கண்ட சொத்து விபரத்தில் கண்ட சர்வே எண்களை

திருத்தம் செய்வதால் எதிர்மனுதாராகள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்கக்கூடியதில்லை. எனவே, அசல் வழக்கில் சொத்து விபரத்தை திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிருரையின் சுருக்கம்**

மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகளால் கடந்த 06.10.2020 ல் அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டி order 6 rule 17 மற்றும் sec 151 CPC யில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது கடந்த 12.10.2020 ல் I.A.No.49/2020 ஆக நம்பராகி அதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கவுண்டர் தாக்கல் செய்யப்பட்ட மனுதாரர் தரப்பு enquiry க்காக வாய்தா ஏற்பட்டு அதில் மனுதாரர் தரப்பில் நீண்ட நாட்களாக enquiry பேசாத காரணத்தால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஏற்கனவே enquiry பேசப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் மனுதாரர் தரப்பில் கடந்த 23.06.2022 ம் CPC sec 151 ல் மனு செய்து நமது நீதிமன்றத்தில் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேறோரு வழக்கில் உள்ள ஆவணங்களை யாதஸ்து செய்து இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது I.A.No.1/2022 ஆக நம்பராகி அந்த மனு அனுமதிக்கப்பட்டும் இன்றைய தேதி வரை மேற்படி I.A.nO.49/2020 ல் enquiry பேசாமல் மேற்படி வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மேற்படி இந்த மனுவினை மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் பலமுறை வாதுரை திருத்த மனு தாக்கல் செய்வதற்கு மனு செய்து பின்னர் அதனை ரிட்டன் எடுப்பதும் வாடிக்கையாக கொண்டுள்ளனர். மேலும் வழக்கை காலதாமதம் செய்ய வேண்டும் ஒரே எண்ணத்தில் மேற்படி மனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர்.

மேற்படி சர்வே எண் 240/1 மற்றும் 240/2 ஆகிய இரண்டு சர்வே எண்ணும்

அரசு புறம்போக்கு நிலமாகும். மேற்படி வழக்கு தாக்கல் செய்த காலத்திலும் அதற்கு முன்னரே மேற்படி அரசு புறம்போக்கு நிலத்தில் சுமார் 75 வருட காலங்களாக மேற்படி 3ம் எதிர்மனுதாரர் தகப்பனார் கோவிந்தன் அவர்களும் அவர் இறப்பிற்கு பின் இந்த 2. 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து மேற்படி சர்வே எண்ணில் வசித்து வருகிறோம். இவை அனைத்தும் நன்கு அறிந்த மனுதாரர்கள் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்தின் ஒரு பகுதி கிரையம் செய்து கொடுத்த போதும் மேற்படி சர்வே எண்.240/1 என்றுதான் கிரையம் செய்துள்ளனர். ஆனால் தற்போது தவறாக சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறுவது சுத்த பொய். மேலும் மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வேறு சில வழக்குகளும் கடந்த 2014ம் ஆண்டில் இருந்து தாக்கல் செய்து நடத்தி வரும் சூழ்நிலையில் மேற்படி சர்வே எண் தவறுதலாக இருப்பது தற்பொழுது தான் தெரிய வந்ததாகவும், மேலும் இந்த தவறு Typographical error என்று கூறி இருப்பது இமயமலையை விட மிகப்பெரிய பொய் ஆகும்.

மேலும் I.A.No.49/2020 மனுவில் அசல் வழக்கை திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள மனுவில் அசல் வழக்கின் தன்மையையே மாற்றம் செய்யும் வகையில் முழுவதுமாக மாற்றம் செய்ய மனுதாக்கல் செய்த காலத்திலும், மேற்படி சர்வே எண் தட்டச்சு பிழையால் தவறுதலாக, இருக்கும் சங்கதி அன்றைய காலங்களில் தெரியவில்லை என கூறுவது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. மேலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு அசல்வழக்கில் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்.240/1தான் காட்டப்பட்டு கிரைய ஆவணம் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு கவனிக்கதக்கதாகும். மேலும் வழக்கு தாக்கல் செய்து சுமார் 8 வருட காலமாக மேற்படி வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மனுதாரர்கள்/வாதிகள் செயல்பட்டு வருகின்றனர். மேலும் மனுதாரர்கள் அசல் வழக்கை தாக்கல் செய்யும் பொழுது நன்கு தெரிந்தே சொத்து விபரத்தில் சர்வே எண்.124/1 புதிய சர்வே எண்.240/1 என தாக்கல் செய்துவிட்டு தற்போது வேறு வழக்கில் சாட்சி விசாரணையில் சர்வே எண். மாறுதலாக இருப்பதை அறிந்து மேற்படி வழக்கில் சர்வே எண்ணை மாற்றம் செய்ய வேண்டும் என வேண்டி மேற்படி மனு தாக்கல்

செய்திருப்பது தட்டச்சு பிழையால் ஏற்பட்ட ஒன்றல்ல என்பதை தெளிவாக காட்டுகிறது. மனுதார்கள் நன்கு அறிந்து கொண்டே அசல் வழக்கின் தன்மையினை மாற்றம் செய்யவே மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்படி மனுவினை அனுமதித்தால் இந்த எதிர்மனுதாரருக்கு என்னில் அடங்கா கஷ்ட நஷ்டம் ஏற்படும்.

மேற்படி அசல் வழக்கில் கண்ட சர்வே எண்களை திருத்துவதால் வழக்கின் தன்மையும் தாவா சொத்தின் அம்சமும், வழக்கு மூலமும் முற்றிலும் மாறும். மேலும் மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் Written statement ல் உள்ள எதிருரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அடிப்படையில் தான் அசல் வழக்கை திருத்தம் செய்ய மேற்படி வழக்கில் I.A.No.49/2020 மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 8 வருடங்களாக சர்வே எண் தவறை திருத்தம் செய்யாமல் வேறுவழக்கில் மனுதாரர்கள் தவறாக தாக்கல் செய்தது சாட்சி விசாரணையில் தெரியவந்ததாக கூறி இந்த மனுதாக்கல் செய்வது என்பது மனுதார் எதிர்மனுதாரர்களின் கவுண்டரை பார்த்து ஒவ்வொரு முறையும் வழக்கை திருத்தம் செய்ய மனு செய்வதற்கு வழி வகுக்கும்.இதனால் அசல் வழக்கின் கால விரையம் மற்றும்வழககின் தன்மை மாற்றம் ஏற்படும். மேலும் மேற்படி திருத்த மனுவானது கால வரைச்சட்டத்தால் ஏற்படும் தோசத்தினை மறைப்பதற்காக மனுதாரரால் புதிதாக ஒரு வியாஜ்ஜியத்தை உண்டு செய்து மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனுவினை அனுமதித்தால் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மிகுந்த பாதகமும் கஷ்ட, நஷ்டமும் ஏற்படும்.

மேற்படி அசல் வழக்கில் கண்ட சொத்து விபரத்தில் கண்ட சர்வே எண்களை திருத்தம் செய்ய இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தனது கடுமையான ஆட்சேபனையை இந்த எதிருரை மூலம் தெரிவித்துக்கொள்கிறார்கள். வழக்கு விசாரணையை இழுத்தடிக்கவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவை எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யும் படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4. 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியது. மனுவில் கண்டுள்ள விபரங்களை இந்த மனுதாரர்கள்/வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

இந்த மனுதாரர்கள்/வாதிகள் கோரியதாவது இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ரிடி, இராமேஸ்வரம் சப்டி, மண்டபம் குரூப், மண்டபம் வருவாய், பழைய சர்வே எண்.124/1 என்றிருந்து புதிய சர்வே எண்ணாக மாற்றம் செய்யப்பட்ட சர்வே எண்.240/1 ல் சுமார் 9 செண்ட் நிலமும், "என்பதற்கு பதிலாக " பழைய சர்வே எண்.240 என்றிருந்து தற்போது புதிய உட்பிரிவுகளின்படி சர்வே எண்.240/2 ல் சுமார் 9 செண்ட் நிலமும்" என்று சேர்க்க வேண்டும் என்ற விபரத்தை இந்த 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் கடுமையாக மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது.

மேற்படி இந்த மனுதாரர்கள் கூறியதுபோல் சர்வே எண்.240/2 ஆனது வருவாய் ஆவணங்களின்படி வண்டில்லா புறம்போக்கு வட்டக்கிணறு என வருவாய் கணக்கேட்டில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சர்வே எண்.240/2 இல் யாதவர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட மாரியம்மன் கோவில் உள்ளது. அதை 1907ம் ஆண்டு முதல் யாதவர் சமுதாய மக்கள் நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

மேலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி இராஜவேலு இந்த மனுதாரர்கள்/வாதிகளிடம் இருந்து மேற்படி சர்வே எண்.240/1 என்றிருந்து தற்போதைய உட்பிரிவுகளின்படி புதிய புல எண்.240/2 சொத்தை கிரையம் பெற்றுள்ளார்.

மேலும் இந்த மனுதாரர்கள் தாவா சொத்து சர்வே எண்.240/2யை குறித்து மாண்பமை நீதிமன்றம் O.S.No.2/2022 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு I.A.No.1/2022 ல் மேற்படி தாவா சொத்தில் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க தேவையில்லை என மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தாவா சொத்தை பொறுத்து இந்த மனுதாரர்கள்/வாதிகள் வெவ்வேறு விபரங்களை கொண்டும், பொய்யான விபரங்களை தானே வருவித்து பல வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். மேலும இந்த மனுதாரர்கள் நீதிமன்றத்தின்

பொன்னான நேரத்தை வீணடிப்பத்துடன், இந்த 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியை வயோதிக காலத்திலும் அலைக்கழிக்கப்பட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல்செய்துள்ளனர். எனவே, இந்த மனுவை 1ம்எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யும் படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.**<u>பிரச்சனை:</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா, இல்லையா என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5.**<u>தீர்வுகள்:</u>**

மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கினை தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து விசாரணைக்க வராமல் நிலுவையில் இருநது வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே மனுதாரர்கள்/வாதிகளால் பிராதினை சீர்திருத்தம் செய்வதற்கு இ.ம.எண்.49/2020 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவும் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் இந்த சீர்திருத்த மனுவை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்தின் பழைய சர்வே எண்.240 என்றிலிருந்து புதிய உட்பிரிவின்படி 240/2 என்று சீர்திருத்தம் செய்யக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்தம் செய்ய சொல்லப்பட்ட காரணமானது Typographical error என்றும், அதனடிப்படையில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டால், அந்த தீர்ப்பாணையை நிறைவேற்ற இயலாமல் போய்விடும் என சொல்லப்பட்டுள்ளது.

அதேவேளையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே பிராதினை சீர்திருத்தக்கோரி இ.ம.எண்.49/2020 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. அதேபோல் இந்த மனுவும் அசல் வழக்கினை காலம் கடத்தவேண்டும் என்ற எண்ணத்தில் தான் மனுவை தாக்கல் செய்துள்ளனர். சர்வே எண்.240/1 மற்றும் 240/2

ஆகியவை அரசு புறம்போக்கு இடமாகும். 2014ம் ஆண்டிலிருந்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. தற்போது சர்வே எண் தவறுதலாக Typographical error குறிபிடப்பட்டது என சொல்லிருப்பது எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்கையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்கின் தாவா சொத்தின் பழைய சர்வே எண். 240 என்றிலிருந்து தற்போது புதிய உட்பிரிவின்படி சர்வே எண் 240/2ல் சுமார் 30 செண்ட் நிலமும் என சீர்திருத்தம் கோரப்பட்டுள்ளது. அந்த சர்வே எண்களை தபசில் விபரத்தில் திருத்துவதால் தாவா சொத்தின் தன்மை மாறப்போவதில்லை.

அசல் வழக்கில் ஒருவேளை இறுதியாக மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஏற்பட்டாலும், தவறுதலாக காட்டப்பட்டுள்ள சர்வே எண்களை வைத்து தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய இயலாது. அதனால் பின்பு இதுசம்பந்தமாக மீண்டும் ஒரு மனு தாக்கல் செய்யவேண்டிய நிலை ஏற்படும். மேலும் கட்டளை 7 விதி 3ன் படி சரியான சர்வே எண்னை தபசில் விபரத்தில் குறிப்பிட்டு வழக்கினை தாக்கல் செய்யவேண்டிய கடமை மனுதாரர்கள்/வாதிகளுக்கு உள்ளது. அதனால் இந்த மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாராகள்/பிரதவாதிகளுக்கு எந்தவித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

6). இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், இந்த மனுவை அனுமதித்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு வாய்ப்பு அளிப்பதினால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவொரு பாதகமும் ஏற்படப்போவதில்லை. எனவே, நீதியின்நலனை கருத்தில்கொண்டு இம்மனுவை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

மனுதாரர்கள்/வாதிகள் வரும் 01.09.2023ம் தேதிக்குள் ரூ.250/-யை செலவுத்தொகையாக 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும் மற்றும் 2, 3, 7, 8, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையாக ரூ.500/-யை செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும். தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் உத்தரவிடப்படுகிறது.

மீண்டும் அழைக்க 01.09.2023.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆகஸ்ட் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/-S.இளையராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி** :- இல்லை

**மனுதாரர் தரப்பு சாண்றாவணம்** :- இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி,சாண்றாவணம்** :- இல்லை

sd/-S.இளையராஜா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
ஐ.ஏ.எண். 02/2023
இன்
அ.வ.எண்.42/2015
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:16.08.2023